எதிர்நோக்கின் ஜூபிலி ஆண்டு 2024 டிசம்பர் 29 ஆம் தேதி தொடக்க மறைவுரை.

தூய ஆவியின் பேராலயம் பினங்கு.

எதிர்நோக்கின் யாதிறிகள் - எதிர்நோக்கின் பரவசம்- உயிரோட்டமான எதிர்நோக்கை ஊக்குவைப்போம்.

1. எதிர்நோக்கினை பற்றி ஒரு கதை என்னிடம் இருக்கிறது; நான் மூன்று பேரை உதவிக்கு அழைத்துளேன், இந்த கதையை சொல்வதற்கு, அந்த மூன்று பேர்கள் இறை தூதர் காபிரியேல், தூய ஆவியானவர், புனித பட்டம் பெற விற்கும் கார்லோஸ் ஆகுதிஸ் என்பவர்கள். இந்த புனித எதிர்நோக்கு கொடையாக பட்டது, ஒரு போதும் நம்மை கைவிடுவாதில்லை, எல்லா பயங்களையும் வெல்லும், மனம் கலக்கமூராது என்றுமே உயிரோட்டமாக இருக்கும்.

2. இன்று நாம் கொண்டாடும் திரு குடும்பம் திருவிழா, எதிர்நோக்கின் அடையாளமாகும். வாழ்வின் சவால்கள், நிச்சயம் இல்லா சூழ்நிலைகளை மரியாள், யோசெபு, இயேசு உலகில் வாழ்ந்து தங்கள் பணியை மேற்கோண்டது, எதிர்நோக்கின் பிரதிபலிப்பாகும். அவர்கள் எதிர்நோக்கின் யாதிறிகள். நாம் எப்படி எதிர்நோக்கை உயிரோட்டமாக வைத்துகொள்வது? குறிப்பாக பிரிவினைகள்,போர், இயற்கை பேரழிவு, அன்றாட வாழ்க்கை சவால்கள்,பொருளாதார சுமைகள், எதிர் காலத்தை பற்றிய நிச்சயம் இல்லாத தன்மை, ஊழல், நோய், வாழ்க்கையின் நோக்கம், பாவத்தோடு அன்றாட போராட்டங்கள், குடும்பங்கள் அதன் மத்தியில் எப்படி எதிர்நோக்கத்துடன் வாழ்கிறோம். மேலும் இன்னும் பல குழப்பங்கள் மத்திரயில் நாம் உயிரோட்டமாக எதிர்நோக்கத்துடன் வாழ, நம்மை தவழ செய்யும்.

3. ஆனால் இன்று நமது பாபரசர் பிரான்சிஸ் அவர்களும், ஆவியானவரும், நானும் உங்கள் ஆயர், எதிர்நோக்கின் யாதிறிகளாக தொடங்க இந்த 29 ஆம் தேதி டிசம்பர் மாதம் 2024 ஆம் ஆண்டு முதல், பின்பு அதை நிறைவு செய்ய

28 ஆம் தேதி டிசம்பர் மாதம் 2025 ஆம் ஆண்டு வரை, ஒரு புதுபித்த எதிர்நோக்கின் யாதிறிகளாகவும், தனியாகவும், கத்தோலிக்க திரு அவை அனைத்தோடும், இந்த உலகிலும், வாழ்ந்திட நம்மை அழைக்கின்றனர். ஆவியானவர் நம்மை இந்த திரு பயணத்தில் ஆரம்பத்திலும் அதன் முடிவிலும் இந்த எதிர்நோக்கின் யாதிறைக்கான பயணத்தில் நம்மை ஆச்சரியத்துகுள்ளாக்குவார்.

*நாம் மனம் திரும்ப ஆவியானவர் அழைக்கின்றார்*

4. இந்த எதிர்நோக்கின் யாதிறையின் மைய கறுத்து, இப்போது ரோமில் முடிவடைந்த ஆயர்கள் மாமன்றம், இந்த வருடம் அக்டோபர் மாதத்தில் நடந்தேறியது. அதில் கூறப்பட்ட போது " மனமாற்றம் என்னும் கருத்தாகும்". மனம் மாற்றம் என்றால் என்ன? திரு முழுக்கு யோவான் , புனித பேதுரு, புனித பாவுல் வார்த்தைகளின் படி மனம் திரும்பி நற்செய்தியை நம்புவதாகும். இந்த எதிர்நோக்கின் "ஜுபிலி" ஆண்டு பல நிகழ்ச்சிகலோடும், நம்மை திசை திருப்பும் நிகழ்ச்சிகலோடும் , கடைசியில் தோல்வியில் வந்து முடியலாம். லுக்கா நற்செய்தியில் (3: 10) மக்கள் திரு முழுக்கு யோவானிடம் கேட்பார்கள் " நாங்கள் என்ன செய்ய வேண்டும் " அதற்கு அவர் கூறினார் "மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள் " என்ற யோவானின் பதில் ஆச்சரியத்துக்கு உறியதாகவும் எலிமையாகவும் இருக்கிறது. யாராவது இரண்டு அங்கி உள்ளவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும். அதை போல உணவு உள்ளவர்கள் உணவில்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும் . புனித பவுல், திரு தூதர்பணியில் ( 26:20) யில் தாங்கள் மனமாறினார்கள் என்பதன் அடையாளத்தை காட்ட வேண்டும் என்று கூறியுள்ளார். மனம் மாற்றம், மனம் திரும்புதல் இவை இரண்டும், கடினமானதும் இல்லை, புரிந்து கொள்ள முடியாததும் இல்லை . ஊதாரி மகன் கதையில் உள்ளது போல, ஊதாரி மகன், ஊதாரியான தந்தை. நாங்கள்: பாபரசர் பிரான்சிஸ், தூய ஆவி, நானும் உங்கள் அனைவரையும் ஆழைக்கின்றோம். பன்றி தொழுவத்தின் சேற்றிலிருந்து, தந்தையின் வீடு திரும்ப அழைக்கிறோம்.

விசுவாசம், எதிர்நோக்கு, தர்மம், இதற்கு உள்ள தொடர்பு.

5. இந்த யாத்திரையின் போது விசுவாசம் எதிர்நோக்கு தர்மம் இவைகளின் தொடர்பை கண்டுகொள்ளலாம். இவை மூன்று ஆவியாரின் கோடைகள் ஆகும். இந்த யாத்திரையின் போது ஆவியானவரிடம் நாம் வீடு திரும்ப விசுவாசம், எதிர்நோக்கு என்னும் கோடைகளை கேளுங்கள் .நம் வீடு திரும்பிய பின் தர்மம் வந்து சேறும்.

6. எதிர்நோக்கு வருங்காலத்தை பற்றியதாகும். இது வருங்காலத்தில் இயற்கை மீதும், மனித நேயத்தின் மீதும் நாம் கனவு கான வழி வகுக்கிறது. அது கடந்த காலத்தில் நடந்த வற்றில் மூழ்கி விடாது . அது அந்த பன்றி தொழுவத்தில் உள்ள சேற்றை விட்டு விட்டு இல்லம் நோக்கி நகர்ந்தும் அங்கு நமக்கு ஒருவர் காத்திக்கின்றனர்.இந்த வருங்கால எதிர்நோக்கின் காட்சிகளை நாம் காணும் போது நம் தற்கால துன்பங்கள், சவால்களை தைரியத்துடன் எதிர்கொண்டு முன்னேறி செல்ல முடியும். இந்த முன்னேறி செல்லும் இழக்காகப்பட்டது, இயேசு சொன்ன இருதி இறைவாக்காக பட்டது, நான் உங்களை திக்கற்றவர்கலாக விடமாடேன். உலக முடிவில் வந்து உங்களை வாண்வீட்டிற்கு அழைத்து செல்வேன் என்ற வாக்குறுதி.

இந்த வாக்குறுதி நம்மில் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் நிறப்பி நாம் நிகழ்காலத்தை முழுமையாக ஆட்கொண்டு மகிழ்ச்சியும், இறக்கமும், எதிர்நோக்கு நிறைந்த சீடர்கலாக உருவாக்கும்.

இரக்கம், மகிழ்ச்சி , எதிர்நோக்கு நிறைந்த யாதிரைகள்.

7. நீங்கள் இந்த யாத்திரையை தலையிலிருந்து (எண்ணங்கள்) காதிலிருந்து (செய்திகள்) கண்களிலிருந்து (பார்பவை) மரியாவை போல இதயத்தில் தியானிக்க உங்களை அழைக்கிறேன். இதயத்தில் இருந்து தொடங்கி உங்கள் யாதிறையை உங்கள் கைகளில் , கால்களில் (விசுவாசமும் செயலும் ) கொண்டு வாருங்கள்.இந்த யாதிறை உங்கள், உள்ளம், ஆவி, உடல், உங்கள் முழுவதையும் உட்படுத்தும்.

8. நாங்கள், பாபரசர் பிரான்சிஸ் அவர்களும், கார்லோ ஆகுதிஸ் நானும் இளைஞர்களிடம் பேச விரும்புகிறோம். உங்கள் மனதளவில் இந்த எதிர்நோக்கின் யாதிறையை மேற்கோள்ள உங்களை அழைக்கிறேன். அதாவது மெய்நிகர் வாயிலாக நிங்கள் இனையத்தை தைரியமாக பயன்படுத்தி , இனையமுறை பணியாளராக, ஒருவருடன் எதிர்நோக்கின் கதைகளை பகிர்ந்து கொள்ள உங்களை அழைக்கிறேன். உங்களுக்கு ஒரு வேண்டுகோள், நிங்கள் நன்றாக வியர்வை சிந்த வேண்டும். சில சமயங்களில் நிங்கள் இறங்கி போய் எதிர்நோக்கின் யாதிறையை மேற்கோள்ள வேண்டும். தனியாகவோ அல்லது நண்பர்களுடனோ நிங்கள் உங்களுடைய கைபேசிகளை உடன் கொண்டு வரலாம் .

இளைஞர்கள் , முதியவர்கள், நோயாளிகள், நலமாக இருப்பவர்கள், புனிதர்கள், பாவிகள், சிறு பிள்ளைகளையும் உட்படுத்தி இந்த யாத்திரை தொடங்க இன்று அனுப்புகிறேன். 29 ஆம்தேதி டிசம்பர் மாதம் 2024 தொடங்கி 28 ஆம் தேதி டிசம்பர் மாதம் 2025 வரை முவோரு இறைவனின், தந்தை, மகன், தூய ஆவியின் ஆசிர்வுடன்.

ஆண்டவராகிய இயேசுவே வாரும்.